# WHAT MUST I DO TO BE SAVED?

# நான் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும்?

இது ஒவ்வொருவரும் கேட்கவேண்டிய ஒரு நல்ல கேள்வியாகும். அது ஆத்துமாவின் நித்தியமான நிலையைக் (நித்திய ஜீவனைக்) குறித்தது. நீ கிறிஸ்தவனாக இல்லாவிட்டால், மறுபடியும் பிறக்காவிட்டால், இயேசு, "நீ மறுபடியும் பிறக்கவேண்டும்" (பரி. யோவான் 3:7) என்கிறார்.

'மறுபடியும் பிறக்கிறது' என்றால் அதன் அர்த்தமென்ன? திரும்பவும் 'பிறக்கிறது' என்று அர்த்தம்—திரும்பப் பிறந்ததின் அனுபவத்தைக்கொண்டு உள்ளது. வேறு வகையாய்ச் சொன்னால், "......உங்கள் பாவங்கள் நிவிர்த்தி செய்யப்படும்பொருட்டு"............மனந்திரும்பிக் குணப்படுங்கள். அப்போஸ்தலர் 3.19.

இந்தப் புது ஜனனம் யாருக்குத் தேவை? தங்களுக்குத் தாங்களே கணக்குக்கொடுக்கவேண்டும் என்று அறிகிற பருவம் அடையும் ஒவ்வொரு ஆணுக்கும், பெண்ணுக்கும், சிறுவனுக்கும், சிறுமிக்கும் ஆவிக்குள்ளாகப் பிறப்பது அவசியம். ஏசாயா தீர்க்கதரிசி தனது தீர்க்கதரிசனப் புத்தகத்தின் 53ஆம் அதிகாரத்தில், பரிசுத்தாவியினால் ஏவப்பட்டவனாக, ஆண்டவராகிய இயேசுவின் பாடுகளை அநேக நூற்றுக்கணக்கான வருடங்களுக்கு முன்பே வர்ணித்திருக்கிறான். ஆறாம் வசனத்தில், "நாமெல்லாரும் ஆடுகளைப் போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம்....." என்று கூறுகிறான். இயேசுவும், "...ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்ஜியத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" என்று கூறி அதைத் தெளிபடுத்தினார். பரி. யோவான் 3:3. அது அவனுடைய ஆவிக்குரிய பிறப்பு என்று சொன்னார். இவைகளெல்லாம் பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்படக்கூடியவை.

"வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன். என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது. மத்தேயு 11:28-30 என்று சொல்லி இயேசு அழைக்கிறார்.

பாவ வியாதியால் பீடிக்கப்பட்டு, பாவச் சுமையால் களைத்துபோன எல்லாரும் அவைகளை இயேசுவின் சிலுவையினடியில் கொண்டுவந்து வைத்துவிட்டு, "ஒப்புரவாகுதலைப்" (ரோமர் 5:11) பெற்றுக்கொள்ளவேண்டுமென்று அழைக்கப்படுகிறார்கள். இயேசு பாடுபட்டு, தம்முடைய இரத்தத்தைச் சிந்தி, சிலுவையிலே மரித்ததினாலே, "நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்

கிறார்'' I யோவான் 2:2. நாம் நம்முடைய சகலவிதமான பாவங்களை சிந்தித்துப்பார்த்து, நம்முடைய பாவங்கள் யாவையும் இயேசு நமக்குப் பதிலாக சிலுவையில் சுமந்தாரென்று உணரவேண்டும். ''பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கையிட்டு, விட்டுவிடுகிறவனோ இரக்கம்பெறுவான்.'' நீதிமொழிகள் 28:13.

நீ எவ்வளவு பெரிய பாவியானாலும் சரி உனக்கு நம்பிக்கையின் இடம் ஒன்று இருக்கிறது. ''வழக்காடுவோம் வாருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப்போல் வெண்மையாகும்; அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும்'' ஏசாயா 1:18.

''கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை நீ உன் வாயினால் அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்'' ரோமர் 10:9. '' இதோ வாசற்படியிலே (இருதயத்தின் வாசற்படி) நின்று தட்டுகிறேன் (கூப்பிடுகிறேன்); ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால் (நாம் அவருடைய சத்தத்திற்குச் செவிகொடுத்து, நமது இருதயத்தின் கதவைத் திறந்தால்) அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன். அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்'' வெளிப்படுத்தல் 3:20. பாவத்தினின்று மன்னிப்பைப்பெற்றும், ''நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம் எனப்பட்ட மகத்துவமான நிலைமையை அடைவது எத்தனை நலமாயிருக்கும்'' ரோமர் 5:1. அதுவே பூலோகத்தில் பரலோகத்தின் ஆரம்பமாகும்.

''இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின'' II கொரிந்தியர் 5:17. ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை'' ரோமர் 8:1. மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையும் (I யோவான் 2:15-17) கலாத்தியர் 5:19-21 வரை கூறப்பட்டு மாம்சத்தின் கிரியைகள் யாவும் பரலோக இராஜ்ஜியத்திற்குப் புறம்பாயுள்ளவைகளாகும். இப்படியிருக்க, கலாத்தியர் 5:22-26 வரை கூறப்பட்டுள்ள ஆவியின் கனிகள் ''இந்த ஜீவனுக்கும் இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாயிருக்கிறது'' I தீமோத்தேயு 4:8.

இக்கைப்பிரதியை வாசிக்கும் அன்பார்ந்த சகோதரனே, சகோதரியே இன்னும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை பற்றி அறிய விரும்பினால் கீழ்க்காணும் விலாசத்திற்கு எழுதவும்.

**The Light of Hope**
Cheppad P.O., Alappuzha Dist - 690 507
Kerala State, India